RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s628

# முதுமொழிக்காஞ்சியில் தனிமனித ஒழுக்கம்

**மா. ஜெகதாம்பாள்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-11, தமிழ்நாடு, இந்தியா.

# Self Decipline in Mudhumozhi Kanchi

**M. Jagathambal** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem – 636 011, Tamil Nadu, India

* Corresponding Author: drjagathambal@gmail.com

Received: 13-10-2021
Revised: 26-04-2022
Accepted: 10-05-2022
Published: 18-07-2022

Check for updates

**ABSTRACT**

Mudumozhikanchi, written by Madurai cuddalore, has distanced itself from the actions of all the pepoles of the world. In kurattalisai, the old languages in the cult are for the benefit of the people. Emphasizes the actions of the superiors and does not condemn the actions of the subordinates. But the human has best described every aspect of human life as a gift, hme, education, material virute, friendship, morality, and physicality. Poverty of human life lies in the fact that if these are not consistent then poverty willensue Mudumolikanchi is the best life guide in the world, highlighting the virtues of life that are relevsant in all ten chapters, to all time.

**Keywords:** Home, Education, Virtue, Friendship, Discipline, Gift, Shame

## முன்னுரை

உயர்ந்த பண்புகளால் தன்னை, தன் தகுதிகளை மதிப்பை புகழை உயர்த்திக் கொண்டு மனித இனம் வாழ்வதற்கு ஏற்ற அரிய கருத்துக்களைத் தாங்கி மக்களின் முன்னேற்றத்திற்கு கலங்கரை விளக்கங்களாக, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் சான்றோர்களின் அனுபவ மொழிகள் எனில் மிகையாகாது- 'ஒழுக்கம்' என்ற ஐந்தெழுத்து சொல்லை மனிதன் தன் ஐம்பொறிகளையும் முறையாகக் காத்து முன்னோர்கள் கூறிச் சென்றுள்ள அறிவுரைகளைச் சிந்தித்து வாழ்வை நல்வழிப்படுத்தும் பொழுது ஒளிரும் சொல் எனலாம். மனிதகுலம் சிறந்து செழித்து நலமுடன் வாழவகை செய்யும் வகையில் மதுரை கூடலூர் கிழார் தன் சிந்தனைகளை ஒரு சேர இணைத்து முதுமொழிக்காஞ்சி யாகத் தொகுத்தளித்துள்ளார். அதில் இடம்பெsற்றுள்ள தனிமனித ஒழுக்கம் குறித்த கருத்துக்களை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கம்.

ஒழுக்கம் என்பதற்கு வாழ்வியற்களஞ்சியம், ஒழுக்கம் என்ற சொல் நன்னடத்தையைக்குறிக்கிறது. நன்னடத்தையென்று உலகில் மனிதன் பிறருடன் பழகும் முறைநடத்தை பிறருக்கு நன்மை பயக்கும் வகையில் அமைந்தால் தான் நன்னடத்தை என்ற பெயரைப் பெறமுடியும். மனம் சொல் செயல் இம்மூன்றும் ஒன்றாக இணங்கி இருக்கும்படி செயற்படுவது ஒழுக்கம். சரிவர அமைவதற்கு இவற்றின் ஒன்றுதல் தேவை என்கிறது. "கழகத்தமிழ் அகராதியானது" "சீலம் நன்னடத்தை உலகம் ஓம்பிய நெறி வழி செல்லுகை உயர்ச்சி தன்மை முறை மேன்மை நற்கடமைகளில் நின்றும் தவறாது நடத்தல்" என்றெல்லாம் பொருள் தருகின்றது. இதன்வழி வாழ்வியற்களஞ்சியம் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் எடுத்துள்ள மனிதப் பிறவியில் பிறர் மதிக்கும்படி ஒழுக்கத்தில் சிறந்து விளங்கி சமுதாயத்திற்கு பயனுள்ள குடிமகனாக வாழ்தலே பிறப்பின் பயனாகும்

என்பதை அறியமுடிகின்றது. இதில் முதுமொழிக்காஞ்சி தனிமனிதன் சிறந்து விளங்க சிறந்த பத்தின்வழி எடுத்துரைக்கும் தனிமனித ஒழுக்கங்களைக் காண்போம்.

## நாணமுடைமை

சான்றோர் வெறுக்கும் கீழான செயல்களைச் செய்வதற்கு வெட்கப்பட வேண்டும். அவ்வாறு வெட்கப்படுதலே ஒரு மனிதனைத் தவறு செய்ய முனைந்தாலும் திருத்தி நல்வழிப்படுத்தி நலமுடன் வாழ வகை செய்யும். இதுவே அறவழியில் பொருள் ஈட்டவும், ஈட்டிய பொருளைச் செலவு செய்யவும் வழிவகுத்து உதவும். இதனையே முதுமொழிக்காஞ்சி,

“நலனுடை மையி னானுச் சிறந்தன்று” (Venkatasamy Nattar, 2005)

வள்ளுவரும் நாணமுடைமையே நலம்பயக்கும் என்பதை

“நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்”

என்ற குறள்வரி புலப்படுத்துகின்றது (Parimelalagar, 2004)

## நன்னடத்தை

ஒரு மனிதன் சமுதாயத்தில் சிறந்தவன் எனப் புகழப்பட அவனது நடத்தை அடித்தளமாக உள்ளது என்பதை வள்ளுவர்,

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப்படும்”

என்ற குறளின்வழியாக எடுத்துக்காட்டியுள்ளார் (Parimelalagar, 2004). இதேபோல் ஔவையார்,

“ஓதலின் னன்றே வேதியற்க் கொழுக்கம்”

எனவும் குறிப்பிட்டுள்ளனர் (Venkatasamy Nattar, 2005). கூடலூர்க்கிழாரோ கடல் சூழ்ந்துள்ள இந்த உலகத்தில் தோன்றியுள்ள மக்கள் அனைவருக்கும் கற்பதைவிட முக்கியமாக வேண்டப்படுவது நன்னடத்தையே என்பதை,

“ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்

ஓதலிற் சிறந்தன் றொழுக்கமுடைமை”

எனச் சுட்டியுள்ளதை உணரமுடிகின்றது (Venkatasamy Nattar, 2005).

## பிறர் மதிக்க வாழ்தல்

ஒரு மனிதன் தன் மதிப்பின் மீது காட்டும் அக்கறையே, பிறரைத் திரும்பிப் பார்த்து அன்பு பாராட்ட வழிவகை செய்கின்றது என்பதை முதுமொழிக் காஞ்சி,

“காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்”

சுட்டுகிறது (Venkatasamy Nattar, 2005). இதன்வழி பிறர் மதிக்க தன்மதிப்புஅடிப்படையில் வேண்டப்படுகிறது என்பதை உணரமுடிகிறது.

## இல்லற மாண்புகள்

“இல்லறமின்றி நல்லறம் இல்லை” என்பதற்கேற்ப நல்லறமாகிய இல்லறத்தில் பெண்களுக்கு உரிய சில ஒழுகலாறுகளையும் ஆங்காங்கே சில வரிகளில் சொல்லிச் செல்கின்றார்.

நாணம் என்பது பெண்களுக்குரிய ஒரு ஒழுக்கமாக வழிவழியாகக் கருதப்படுகின்றது. அந்நாணம் அவளது புற அழகைக் காட்டிலும் சிறப்புடையது என்பதை,

"நலன் உடைமையின் நாணும் சிறந்தன்று"

என்கிறார் (Venkatasamy Nattar, 2005). இத்தகு அழகுடைய மனைவியோடு வாழும் இல்வாழ்க்கையே நல்வாழ்க்கை அல்லாத வாழ்க்கை சிறப்பன்று என்பதை,

"தாரம் மாணாதது வாழ்க்கை அன்று"

என்றும் தன் கணவன் மனமறிந்து செயல்படுபவளே சிறந்த மனைவி ஆவாள், அல்லாதாள் மனைவி ஆகத் தகுதி அற்றவள் என்பதை

"நீர் அறிந்து ஒழுகாதாள் தாரம் அல்லள்

என்றும் இயம்புகின்றார் (Venkatasamy Nattar, 2005). வாழ்க்கைத் துணையின் சிறப்பினை வள்ளுவம்,

"மனைத்தக்க மாண்பு உடையவள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற குறளில் எடுத்தியம்பியுள்ளார் (Parimelalagar, 2004). மேலும் இத்தகு சிறப்புடைய ஒன்றுபட்ட இல்வாழ்க்கை மக்கட் பேற்றினாலேயே சிறப்புறும் என்பதை

"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

மக்கட் பேற்றின் பெறும் பேறு இல்லை"

என்று வர்ணிக்கிறார் (Venkatasamy Nattar, 2005). வள்ளுவரும் மக்கட்பேற்றின் சிறப்பினை

"பெறும் அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவு அறிந்த

மக்கட்பேறு அல்ல பிற"

அதுமட்மின்றி மக்கட்பேறு தரும் கல்வியே சிறந்தது. அல்லாதவை தீமை உடையது என்கிறார் (Parimelalagar, 2004). இல்லறத்தில் அன்புசால் மெய்யுணர்விற்கு முக்கியத்துவம் தருகின்றது. முதுமொழிக்காஞ்சி இவ்வாழ்வில் பிறன்மனை நயத்தல் பழி உண்டாக்கும் என்பதை

"பெண்டிர் வெய்யோர்க்குப் படுபழி எளிது"

என்று வெளிப்படையாக கூறியுள்ளார் நூலாசிரியர் (Venkatasamy Nattar, 2005).

## முதுமொழிக்காஞ்சியில் கொடைப்பண்பு

கொடை என்பது வறுமையுற்ற பிறருக்கு தமது பொருளைப் பகிர்ந்தளிப்பதாகும். தன்னிடமுள்ள பொருளினைப் பகிர்ந்தளிப்பதன் வழியாக அப்பொருளும் பயனுடையதாகிறது. கொடையுள்ளம் படைத்த ஒருவரால் மட்டுமே பிறருக்குப் பொருளைக் கொடுக்க இயலும். பலருக்கும் பகிர்ந்தளிப்பதற்காகச் செல்வத்தைத் தொகுத்து வைப்பாயாக என்று புலவர் மன்னனை வாழ்த்தியமையைச் சங்க இலக்கியம் எடுத்துக்காட்டும். குமணவள்ளலைப் பாடிப் பரிசில் பெற்று வந்த புலவர் தன் மனைவியிடம்

"இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது

வல்லாங்கு வாழ்தும் என என்னாது நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி மனைக்கிழவோயே

என்பதை இவர்களுக்குத் தான் கொடுத்தல் வேண்டும் என்று எண்ணாது என்னிடமும் கேட்காது பல நாள் வாழ்வதற்கு வேண்டும் என்று நினையாது எல்லோருக்கும் கொடுமதி என்கிறார் (Avvai Duraisamy Pillai, 2011; Swaminatha Iyer, 1984).

முதுமொழிக்காஞ்சியில் கொடையின் பண்பாக, கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்து மக்களை அன்பும் அருளும் கொண்டு காத்து வருகின்றவனே பெருங்குடியிற் பிறந்தவன் என்கிறது. ஒருவனது கொடைச்செயலின் வழியாக அவனுடைய ஆள்வினைத் தன்மை வெளிப்படுகிறது. கொடையினை விருப்பமான உள்ளத்துடன் செய்தல் வேண்டும். ஈகை என்பதனை விருப்பமில்லாமல் செய்தல் கூடாது. பொருள் இல்லாதவனிடம் ஈகைத்தன்மை இல்லையெனில் அறிஞர்கள் பழித்துரைப்பதில்லை. இதனையே

"வறியோன் வள்ளிய னன்மை பழியார்"

என்கிறது (Venkatasamy Nattar, 2005). போலியான ஈகை கீழ்மைத் தன்மை உடையதாகும். ஈகையில்லாதவன் புகழற்றவனாவான். நல்வழியில் தேடிய செல்வத்தையே ஈதல் வேண்டும். ஈதலில் மேன்மை என்பது பிச்சை எடுப்பவனுக்குக் கொடுப்பதில் உள்ளது என்பது அறியப்படுகிறது.

## நட்பு

யாரிடமெல்லாம் நட்பு பாராட்டுவது உண்மையான நட்பை அறிந்து கொள்வது எப்படி எந்த நட்பு பயன்தரக்கூடியது என்பது போன்ற வழிமுறைகளை தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

அதாவது காலம் அறிந்து உதவிசெய்யும் நட்பே உண்மையான நட்பு. சோடை போகாத உண்மையான நட்பை நம் துன்ப காலத்தில் அறிந்து கொள்ள முடியும். உள்ளத்தில் அன்பில்லாதவர் நட்பு உண்மையான நட்பாகாது. அத்தகையவன் நல்ல நண்பன் கிடையாது. அதையும் மீறி உறவு கொண்டாலும், அந்நட்பு எவ்வித பயனையும் தாராது என்றும் கற்றவரிடத்தில் நட்பு பாராட்ட வேண்டும் என்றும் நட்பிற்கு எல்லை வகுத்து அதன் பெருமையை இந்நூல் நிலைநிறுத்துகின்றது. இதனை

"சோராதல் நட்பு உதவிபின் அறிப"

"ஈரம் அல்லாதது கிளை நட்பு அன்று"

"நட்பு இல்வழிச் சேரல் நல்கூர்ந்தன்று"

போன்ற வரிகள் சான்று பகர்கின்றன (Venkatasamy Nattar, 2005). இதற்கு எற்றாற்போல வள்ளுவரின்

"முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு"

என்ற குறள் அமைந்துள்ளது (Parimelalagar, 2004).

## கல்வியுடைமை

மனிதனிடம் இருக்கும் செல்வங்களில் பிறரால் அழிக்க முடியாததும் கவர முடியாததுமான செல்வமாக கல்விச் செல்வம் திகழ்கிறது. அத்தகு சிறப்பு வாய்ந்த கல்வியைப் 'பிச்சைபுகினும் கற்கை நன்றே' என்று கூறியுள்ளனர். மேலும் மேற்குலத்தைச் சார்ந்தவனாய் இருந்து, அவன் கல்வி கல்லாதவனாக இருப்பின் கீழ்க்குலத்தவனாகவே கருதப்படுவான் என்பதைப் புறநானூறு,

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்

மேற்பா லொருவனும் அவனகட்படுமே" (Avvai Duraisamy Pillai, 2011; Swaminatha Iyer, 2014)

எனவும் திருக்குறள்,

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதலர் கீழ்பிறந்தும்

கற்றா ரனைத்திலர் பாடு"

எனவும் சுட்டுகின்றன (Ramalingam Pillai, 2008). முதுமொழிக்காஞ்சி சிறந்தபத்து

"குலனுடை மையிற் கற்பு சிறந்தன்று"

"மேதையன் சிறந்தன்று கற்றது மறவாமை"

என்கிறது (Venkatasamy Nattar, 2005). இதில் கல்வியை கற்பு என்னும் சொல்லால் குறித்து மனிதனுக்கு கற்பு இன்றியமையாமை போன்று கல்வியும் இன்றியமயாது வேண்டப்படும் ஒன்று என சுட்டப்பட்டுள்ளது.

## கூடி வாழ்தல்

மனிதர்கள் பிறருடன் கூடி வாழும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மனித வாழ்விற்கு கூடிவாழ்தல் மிகஇன்றயமையாததாகும். தான் சார்ந்த சமூகத்தின் வளர்ச்சியில் அக்கறையுள்ள ஒருவன் முதலில் அதன் அறப்பண்புகளோடு ஒத்துப்போவது அவசியம். பிறரின் உணர்வுக்கு மதிப்பளிக்காத ஒருவன் உயிரோடு இருந்தாலும் இறந்தாலும் ஒருவனாகவே கருதப்படுவான். இதனை முதுமொழிக்காஞ்சி

"தான் ஓர் இன்புறல் தனிமையின்துல்லாது"

குறிப்பிடுகிறது (Venkatasamy Nattar, 2005). ஒருவன் சமூகத்திலிருந்து பிரிந்து தனித்து இருந்து தன் செல்வத்தை வைத்து தான் மட்டும் இன்புற்று வாழ்வான் என்றால் அவன் செல்வமுடையவனாக இருந்தாலும் வறியவனாக வறுமையாளனாகக் கருதப்படுவான். பிறரோடு கூடி பிறருக்காக வாழும் வாழ்க்கையில் துன்பங்கள் வருவது இயற்கை. அவ்வாறு பிறருக்காகப் படும் துன்பம் துன்பமல்ல. அதுவே இன்ப ஊற்றாகப் பெருக்கெடுக்கும். இதனை,

வாழாமல் வருந்தியது வருத்தமன்று"

உரைக்கின்றது (Venkatasamy Nattar, 2005).

## முடிவுரை

மனித குலத்திற்கு இன்றியமையாத வாழ்க்கை நெறிமுறைகளை மிகச்சிறிய அடியில் தெளிவாக, அழகாக, சுருக்கமாக இந்நூல் எடுத்தியம்புவதை மேற்கூறிய கருத்துக்கள் மூலம் நன்கு அறியலாம். மேலும் ஒவ்வொரு பத்தின் மூலமும் ஒரு சிறப்பான பொதுவான வாழ்வியல் கருத்துக்கள் வலியுறுத்தப்படுவது ஆழ்ந்து நோக்கும் போது புலப்படுகின்றது. வாழ்க்கையில் எதைவிட எது சிறந்தது என்று அறிவுறுத்தும் வகையில் சிறந்தபத்தும், எந்தக் குணத்தின் மூலம் எந்த குணத்தை அறிய இயலும் என்பதை அறிவுப் உளர் அறிஞர்கள் எந்த இயல்புடைய மக்களைப் பழித்துக்கூற மாட்டார்கள் என்பதை பழியாப்பத்தும், எவ்வகை அனுபவத்தைக் காட்டிலும் அனுபவிக்காமல் இருப்பது சிறப்பு என்பதைத் துல்லாப்பத்தும், எவையெல்லாம் நன்னெறிகள் அல்லன என்பதை அல்லபத்தும் எத்தகு ஒழுக்க நிலைகள் மனித குலத்திற்கு சிறப்பு சேர்ப்பன எவை அல்லாதன என்பதை இல்லைப்பத்தும், எது பொய், எது மெய் என்பதை பொய்யாப்பத்தும், எத்தகு பண்புடையவர்க்கு எவையவை எளிது என்பதை எளிய பத்தும், வறுமை தரும் செய்கள் எவை என்பதை நல்கூர்ந்த பத்தும், பின்பற்ற வேண்டிய நெறிகள் என்ன என்பதைத் தண்டாப்பத்தும், முத்தாய்ப்பாய் எடுத்தியம்பும் வகையில் முதுமொழிக்காஞ்சியி ஒவ்வொரு பத்தும் அமைந்துள்ளது. இந்நூலின் ஒவ்வொரு சிறிய அடியிலும் ஒரு பெரிய பொருள் பொதிந்துள்ளது என்பதைக் கற்றோர் யாராலும் மறுக்க இயலாது. ஒழுக்கம் உயிரினும் மேலானது, பண்படுத்தி மேலோங்கச் செய்கிறது. மனிதனை வளப்படுத்திச் சமூகத்திற்கு அடையாளம் காட்டுகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் தன் வாழ்நாளில் இன்றியமையாது பேண வேண்டிய தனிமனித ஒழுக்கங்களையே முதுமொழிக்காஞ்சி முதுமொழியாய் நவின்றுள்ளது என்பதை உணரமுடிகிறது.

## Refrences

Avvai Duraisamy Pillai, S., (2011) Purananuru, Tamilan Pathippagam, Chennai, India

Parimelalagar, (2004) Tirukkuraḷ, Saradha Pathippagam, Chennai, India.

Ramalingam Pillai, V., (2008) Tirukkural, Thendral Nilaiyam, Chidambaram, India.

Swaminatha Iyer, U.V., (1984), Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa Noolaga Nilayam, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (2014), Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga Nilayam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M., (2005), Kondrai Vendan, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License